**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண். 77/2022**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கரோலின் | த/பெ.: | ராஜரெத்தினம் |
| கிராமம்: | நத்தம்பட்டி | தாலுக்கா: | பட்டுக்கோட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | ரியல் எஸ்டேட் firm |
| வயது: | 53 | முகவரி: | எண் 178 மேலத்தெரு, நத்தம்பட்டி, முதல்சேரி. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 19.03.2024

<u>முதல் விசாரணை :-</u>

நான் வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.04.2013 | பதிவு செய்யபடாத கிரய ஒப்பந்த ஆவணம் – அசல் |
| வா.சா.ஆ.2 | 10.06.2022 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 10.06.2022 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சலக ரசீது – அசல் |
| வா.சா.ஆ.4 | 11.06.2022 | பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் |

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/– திரு. கரோலின்

Sd/– திரு. கே. சக்திவேல்.
சார்பு நீதிபதி, மன்னார்குடி.